ஓராயிரம் அமித்ஷாக்கள் வந்தாலும்

தமிழ்நாட்டு மக்களை அசைக்க முடியாது!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஜூன் 13

சென்னை திரு.வி.க நகர் மண்டலத்திற்கு உட்பட்ட ஸ்டீபன் சாலை மேம்பால பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் சென்னை மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், திரு.வி.க.நகர் எம்.எல்.ஏ. தாயகம் கவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பேட்டி அளித்த அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியதாவது:

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொறுத்த வரை மழைக்கால தண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான வசதி, அடிப்படை வசதிகள் பொழுதுபோக்கு வசதிகள் என்று எதையும் திட்டமிடாமல் கடந்த ஆட்சி காலத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அந்தப் பணிகளில் எல்லாம் சுவனம் செலுத்தி வருகிறோம்.

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள், பேருந்து

நிலையத்தைச் சுற்றி சாலை வசதிகள், மழைநீர் தேங்காமல் இருக்க கால்வாய் வசதிகள், பொழுதுபோக்கிற்காக பூங்கா வசதிகள், மருத்துவ மையம், காவல் மையம், ஆம்னி பேருந்து நிலையத்திற்கு தனியாக இடம் தேர்வு செய்து 5 ஏக்கர் பரப்பளவில் ரூ.30 கோடி செயவில் ஆம்னி பேருந்து நிலையத்திற்கு இடம் என பணிகள் நடைபெற்று வருவதால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் பணிகளை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடித்து கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவோம்.

தமிழ்நாட்டில் முதலில் பா.ஜ.க. 25 தொகுதிகளில் போட்டியிடட்டும். அப்படி போட்டியிட்டாலும் தேர்தலுக்கான முன்வைப்பு தொகையை தக்க வைக்கவே பா.ஜ.க. போராடுவார்கள்.

ஒரு அமித்ஷா அல்ல; ஓராயிரம் அமித்ஷா வந்தாலும் தமிழ்நாடு முதல்வர் செல்வாக்கையும், முதல்வர் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையையும், தமிழக மக்களையும் அசைத்துப் பார்க்க முடியாது.

இரண்டு தமிழர்கள் பிரதமராவதை தி.மு.க. தடுத்ததாக அமித்ஷா கூறுகிறார். தமிழக முதல்வரும் தமிழர் தானே.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.

எய்த அம்புகள் எல்லாம் திரும்பும் அஸ்திரமாக மாறுது

ஆளுநரா, அரசியல்வாதியா?

சர்ச்சைக் கருத்துகளால் வலுக்கும் எதிர்ப்பு!

“கல்வியிலும், மக்கள் நலன் பேணுவதிலும் மிகச் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தலை நிமிர்த்து நிற்கிறது. ஆனால் இந்த மாநிலத்தின் வளர்ச்சி, மிகப்பெரும் பொறுப்பில் இருக்கும் ஒருவருக்கு புலப்படவில்லை. அவர் திராவிடமாடல் ஆட்சியை ஏற்றுக் கொள்ளாத நிலையில், அவருடைய கருத்துகளை எல்லாம் விமர்சனங்களாக்கி, தொடர்ந்து மக்களை குழப்பிக் கொண்டிருக்கிறார் ஆனால் அது பற்றியெல்லாம் மக்கள் கொஞ்சம் கூட கவலைப்படமாட்டார்கள். அதையெல்லாம் மக்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை தொடர்ந்து அவர், அவ்வாறு சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு ஒரு எழுச்சி ஏற்படும். மக்களும் ரொம்ப தெளிவாக புரிந்து கொள்வார்கள்.” இப்படி முதல்வர் மு.க.ஸ்டாலின், சமீபத்தில் பெயர் குறிப்பிடாமல் விமர்சித்திருக்கும் அந்த ஒருவர் தமிழ் நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி.

தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டவர், அந்த பொறுப்பில் இருந்து விலகி நின்று, ஒவ்வொரு முறையும் தான் ஒரு அரசியல் வாதி என்பதை நிரூபித்து வருகிறார். அதிலும் தமிழகத்தை தலை நிமிரச் செய்துள்ள திராவிட மாடல் தத்துவத்திற்கு எதிரான பா.ஜ.க.வின் ஆர்.எஸ்.எஸ். கருத்துகளை திணிக்க முற்பட்டு, பின்னர் மூக்குடைந்து நிற்பதுதான் அவரது வாடிக்கையாக மாறி வருகிறது நீட் விலக்கு மசோதாவை கிடப்பில் போட்டது. ஆன்லைன் ரம்மி தடைக்கு எதிராக செயல்பட்டது. தமிழ்நாடு என்பதை ஏற்கமாட்டேன், தமிழகம் என்றே கூறுவேன் என்று முரண்டு பிடித்தது, சிதம்பரம் கோயிலில் குழந்தை திருமணமே நடக்கவில்லை என்று அப்பட்டமாக கூறி, வீடியோ வெளியான நிலையில் விலகி நின்றது. என்று குழப்பமும், சர்ச்சையும் நிறைந்த ஒரு ஆளுநரை இது வரை தமிழ்நாடு கண்டதில்லை என்கின்றனர் மூத்த அரசியல் தலைவர்கள்.

இந்தவகையில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் சென்று வந்துள்ள வெளிநாட்டு பயணம் குறித்த கருத்து, ஆளுநர் வீசியுள்ள லேட்டஸ்ட் அம்பு, அஸ்திரமாக மாறி வழக்கம் போல் அவருக்கு எதிராகவே திரும்பியுள்ளது. உதகையில் சமீபத்தில் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாடு நடந்தது. இதில் பேசிய தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, ‘நாம் நேரில் சென்று தொழில் அதிபர்களிடம் கேட்பதாலேயே முதலீடுகள் வராது. உலகளாவிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு சிறந்த சூழலை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டுக்கு இணையான முத வீடுகளை சிறிய மாநிலமான அரியானா ஈர்த்து வருகிறது. முதலில் தமிழகத்தில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும். முதலீடுகளை ஈர்க்கும் திறமையான மற்றும் பொருத்தமான மனித ஆற்றலை உருவாக்குவதே சிறந்த வழியாகும்,” என்று பேசி உள்ளார்.

சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு 9 நாட்கள் அரசு முறைப் பயணம் மேற்கொண்ட நிலையில் கடந்த வாரம் தமிழ்நாட்டுக்கு திரும்பினார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இந்தப் பயணத்தில் ஐபி நிறுவனம், டைசன் நிறுவனம், ஹோம்ரான் ஹெல்த்கேர் நிறுவனங்கள், உள்ளிட்டவற்றுடன் ரூ.3,233 கோடி, மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதன்படி தமிழ்நாட்டில் புதிய நிறுவனங்கள் கால் பதிக்கப் போகிறது. லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. கட்சி பாகுபாடு இல்லாமஸ் பல்வேறு தலை வர்களும், தொழில்மேம்பாட்டு அமைப்புகளும் முதல்வரின் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர். எதிர்க்கட்சியினரே இந்த பயணம் குறித்து முரண்பட்ட கருத்துகளை தெரிவிக்காத நிலையில், ஆளுநர் ஆர்.என். ரவியின் பேச்சு, மக்கள் மன்றத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள தமிழ் நாட்டின் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, “தமிழக ஆளுநர் அண்மைக்காலமாக முழு அரசியல்வாதியாக தன்னை மாற்றிக்கொண்டுள்ளார். அவரது பேச்சுக்கள் மூலம் இது தெளிவாகிறது. இதன் காரணமாகவே உதகையில் நடந்த துணை வேந்தர்கள் மாநாட்டில் அரசியல் பேசியுள்ளார். குறிப்பாக தமிழகத்தில் கல்விச்சூழல் சரியில்லை, வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. தொழில் முதலீட்டு ஈர்ப்பு பயணங்கள், முதலீட்டாளர்களுடன் பேசுவதால் மட்டுமே முதலீடுகள் வந்து விடாது என்று கூறியுள்ளார். இது தமிழ்நாடு முதல்வரின் வெளிநாட்டு பயணத்தை கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஏற்கனவே சில பிரச்சினைகளில் ஆளுநர் தெரிவித்துள்ள கருத்துக்கள் எதிராக வந்துள்ளதால் இது போல் செயல்படுகிறார். தமிழகத்தின் கல்வி வரலாற்றை அறியாமல் ஆளுநர் உள்ளாரே என்று எண்ணத் தோன்றுகிறது” என்று தெரிவித்து பல்வேறு ஆதாரங்களையும் சான்றாக அடுக்கியுள்ளார்.

இது ஒருபுறமிருக்க, தமிழ்நாடு அரசையும், முதல்வரையும், அமைச்சர்களையும் விமர்சிக்கும் ஆளுநர், தனது கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களை சிறப்பாக கையாண்டு வருகிறாரா? என்றால் கேள்விக்குறியே இங்கு விடையாக முன்நிற்கிறது. குறிப்பாக பட்டமளிப்பு விழாக்களுக்கு ஆளுநர் அனுமதி அளிக்காததால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் கனவாகி நிற்கிறது தமிழகத்தில் 7 பல்கலைக்கழகங்களில் இதுவரை பட்டமளிப்பு விழா நடத்தப்படவில்லை. திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் 2022ம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்த மாணவர்களுக்கு இதுவரை பட்டம் வழங்கவில்லை என்று மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தில் 2022ம் ஆண்டில் தேர்ச்சி பெற்ற 9,29,142 மாணவர்கள் இதுவரை பட்டம் பெற முடியவில்லை.

வேலூர் மாவட்டத்தின் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் 2022ம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா, இதுவரை நடத்தப்படவில்லை. இதனால் 40 ஆயிரம் மாணவர்கள், அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் ஆழ்ந்த கவலையில் உள்ளனர். இவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக புரவிஷனல் சர்ட்டிபிகேட் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 6 மாதங்கள் மட்டுமே ஆயுள் என்ற நிலையில், உடனடியாக பட்டமளிப்பு விழா நடத்த வேண்டும் என்று கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தமிழக அமைச்சர்களை வைத்து பட்டமளிப்பு விழா நடத்துவதில் ஆளுநருக்கு உடன்பாடில்லை. தான் சார்ந்திருக்கும் கட்சி சார்ந்த ஒன்றிய அமைச்சர்களை வைத்தே அவர், பட்டமளிப்பு விழாவை நடத்த விரும்புகிறார். அவர்களின் தேதிக்காக காத்திருக்கும் ஆளுநர் மாணவர்களின் எதிர்காலத்தை பற்றி சிந்திக்கவில்லை என்பது விவரம் அறிந்தவர்களின் குற்றச்சாட்டு. அதே நேரத்தில் தொடர்ந்து திராவிட மாடல் என்ற தத்துவத்தின் மீதான எதிர்ப்பு, சனாதன கொள்கைகளுக்கு உரமூட்டும். பேச்சு, ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் பிரச்சார பீரங்கியாக ஊரெங்கும் வலம் என்று தமிழ்நிலத்தில் முள் விதைப்பதற்கான முன்னெடுப்புகளை முன்னின்று செய்து வருகிறார். அவரது செயல்பாடுகளும், பேச்சுகளும் நாளுக்கு நாள் தமிழ்நாட்டு அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளின் கொள்கை பரப்புச் செயலாளர் போல் பேசுவதை அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்தவகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி தற்போது முதல்வரின் வெளிநாட்டு பயணம் குறித்து ஆலகால விஷத்தை கக்கி இருக்கிறார்.

பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை புகுத்த நினைத்து ஆளுநரின் பேச்சும் செயல்பாடுகளும் எல்லை மீறி போய்க்கொண்டிருப்பது கடும் கண்டனத்திற்கு உரியது. தமிழகத்தின் முதல் விரோதியாக விளங்கும் ஆளுநரை உடனடியாக வெளியேற்ற வேண்டும். இல்லாவிட்டால் நாகாலாந்து மாநிலத்தில் மக்கள் விரட்டி அடித்தது போல், தமிழகத்திலும் நடக்கும் என்பது சமூகநீதிக்காக தொடர்ந்து குரல் எழுப்பும் ஒட்டுமொத்த அமைப்புகளின் எண்ணஓட்டமாக உள்ளது.

கல்வி கட்டமைப்பில் சிறப்பான மாநிலம்!

உயர்கல்வி நிறுவனங்களின் தேசிய தர வரிசைப்பட்டியலில் 100 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அதில் 22 பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் உள்ளது. 100 கல்லூரிகளில் 30 கல்லூரிகள். தமிழகத்தை சேர்ந்தது. ஏற்கனவே நிதி ஆயோக் வெளியிட்ட தரவரிசையிலும் தமிழக கல்வி நிறுவனங்கள் சிறப்பாக செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கை 46.9 சதவீதம், 33.36 லட்சம் பேர், உயர்கல்வி பயில வந்துள்ளனர் என்றால் கல்விச்சூழல் நன்றாக இருப்பது தான் காரணம். தரவரிசையின் பல்வேறு கூறுகளில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் கல்வி கட்டமைப்பில் தமிழகம் மிகச்சிறப்பாக உள்ளது. “பல்கலைக்கழகங்களின் வேந்தராக இருந்து கொண்டு, ஆளுநர் இதை, உணராமல் இருப்பது ஏன் என்று புரியவில்லை” என்பது அனுபவம் வாய்ந்த கல்வியாளர்கள் எழுப்பியுள்ள கேள்வி. இதுஆளுநர் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

2 ஆண்டுகளில் ரூ.2 லட்சம் கோடி!

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுக்காகவும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு முதல்வர், வெளிநாட்டு பயணம் மேற்கொள்வது என்பது புதிய நிகழ்வல்ல. தற்போது இந்தியபிரதமராக இருக்கும் மோடி கூட குஜராத் முதல்வராக இருந்த போது இது போன்ற பயணத்தை மேற்கொண்டுள்ளார். அன்றைய காலகட்டத்தில் சீனா, சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர், ஜப்பான், கொரியா நாடுகளுக்கு பயணித்து முதலீட்டாளர்களை சந்தித்து அழைத்துள்ளார் என்பது இப்போது தமிழக ஆளுநராக இருக்கும் ஆர.என். ரவிக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். முதல்வரின் பயணத்தின் மூலம் ரூ.3 ஆயிரம் கோடிக்கும் மேலான முதலீடுகள் தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ளது. பல உலகளாவிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வந்துள்ளன. தொழில் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு இருப்பதால்தான், முதலீட்டாளர்கள் இங்கு வருகின்றனர். இந்த வகையில் 2 ஆண்டுகளில் மட்டும் ரூ.2 வட்சம் கோடிக்கும் அதிகமான தொழில் முதலீடுகள் தமிழகத்தில் குவிந்துள்ளது என்கின்றனர் தொழில் முனைவோர்.

எதிர்க்காமல் இருக்க முடியாது!

ஆளுநர் ரவி, ஆளுநர் பணியை தவிர அனைத்து பணிகளையும் செய்கிறார். சனாதன வகுப்பு எடுக்கிறார், ஆரியத்துக்கு ஆலாபனை பாடுகிறார். திராவிடத்திற்கு தவறான பொருள் சொல்கிறார். திருக்குறளை திரிக்கிறார். சிவாஜி ஏன் படையெடுத்து வந்தார் என்ற வரலாற்றை மறைக்கிறார். தனக்கு தோன்றும் புதிய காரணங்களை புனைவு காரணங்களாக மாற்றுகிறார். . குடிமைப் பணி தேர்வுக்கு தயாராகும் மாணவர்களை கூட்டி வைத்து சட்டத்துக்கு புறம்பான விளக்கங்கள் சொல்கிறார். இப்படி ஆளுநர் பதவிக்கு அழகில்லாத அடிப்படையில்லாத செயல்களை செய்கிறார். தனிப்பட்ட ரவியாக இருந்தால் அதனை மதிக்கத்தேவையில்லை தமிழ்நாட்டின் ஆளுநராக இருப்பதால், இதை எதிர்க்காமல் இருக்க முடியாது என்பது தமிழ்மேம்பாட்டு அமைப்புகளின் குமுறல்.

இப்போது 7.39 லட்சம் நிறுவனங்கள் இயங்குது!

“வெளிநாட்டுக்கு சென்று வந்தால் முதலீடுகள் வந்து விடுமா? என்ற கேள்வியும் இங்கே அபத்தமானது கடந்த ஜனவரி 2022 முதல் ஏப்ரல் 2023வரை ஓராண்டில் 108 நிறுவனங்கள் ரூ.1.81 லட்சம் கோடிக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ளது. இதன்மூலம் 1.94 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளது. குறிப்பாக கடந்த 2021-22ம் ஆண்டில் தமிழ்நாட்டில் 4.75 லட்சம் நிறுவனங்களில் 36.63 லட்சம் பேர், பணியாற்றுவது பதிவு செய்யப்பட்டது. இது 2022-23ம் ஆண்டில் 7.39லட்சம் நிறுவனங்களாக உயர்ந்துள்ளது. இதில் 47. 17லட்சம் பேர் பணியாற்றுகின்றனர். தமிழ்நாடு முதல்வர் கொண்டு வந்துள்ள நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மட்டும் 4.94 லட்சம் பொறியியல் மாணவர்கள், 10.34லட்சம் கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் திறன் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்கள் ரோபோடிக் உள்ளிட்ட புதிய துறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர். 4ம் ஆண்டு படித்த பொறியியல் மாணவர்கள் 1.15 லட்சம் பேரில் 61,900 பேர் தலைசிறந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இப்படி பல்வேறு உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இப்படிப்பட்ட நிலையில் தமிழகத்தில் வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. கல்விச் சூழல் சரியில்லை என்று ஆளுநர் கூறுவதை விபரம் அறிந்த யாரும் ஏற்க மாட்டார்கள்” என்கின்றனர் கல்வியியல் ஆய்வாளர்கள்.

நன்றி : ‘தினகரன்’ 11.06.2023

சின்னதம்பி பெரியதம்பி

சின்னதம்பி : ஏண்ணே! “நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் 25 தொகுதிகளில் வெற்றி பெறுவதே இலக்கு” என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியிருக்கிறாரே ?

பெரியதம்பி : **ஆமாம்பா! அமித்ஷா அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பதைப் பார்த்தவுடன் பல பழமொழிகள் நமது நினைவில் உலா வருகின்றன. அவற்றுள் முக்கியமானவை: “அத்தைக்கு மீசை முளைத்தால்...”; “இல்லாத ஊருக்கு, போகாத வழி” என்பவை ஆகும் !**

நல்ல வேளை, “இலக்கு” என்றுதான் சொல்லியிருக்கிறார். இலக்கு 39 என்று கூடச் சொல்லலாம்; தவறில்லை; ஆனால் இலக்கைச் சொல்லும்போது, அதற்குரிய அடிப்படைக் கட்டமைப்பு இருக்க வேண்டுமே !

பொய்யான செய்திகள் மூலம் சிதைக்கப்பட்டு - பகுத்தறிவிலிருந்து விலகி

கல்வியை முற்றிலுமாக செயலிழக்கச் செய்துவிட்டது மோடி அரசு!

என்.சி.இ.ஆர்.டி. உறுப்பினர்கள் குற்றச் சாட்டு!

புதுடெல்லி, ஜூன் 13 -

பொய்யான செய்திகள் மூலம் அரசியல் அறிவியல் பாடங்கள் சிதைக்கப்பட்டு பகுத்தறிவுப் பாதையில் இருந்து விலகி, கல்வியை முற்றிலுமாக செயலிழக்கச் செய்துவிட்டது மோடி அரசு என்று கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.) உறுப்பினர்களும் அரசியல் அறிவியல் பாடத்திட்ட தயாரிப்பாளர்களுமான சுஹாஸ் பால்ஷிகர் மற்றும் யோகேந்திர யாதவ் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அனைத்து அரசியல் அறிவியல் பாடபுத்தகங்களில் இருந்தும் தங்கள் பெயரை நீக்கவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

“கல்வி தேசியமயமாக்கல் என்ற பெயரில் நடைபெற்ற இந்த திருத்தத்தில் பகுத்தறிவு இல்லை; மாணவர்களுக்கான பாடத்திட்டத்தை வகுக்கும் குழுவிலும் பகுத்தறிவு உள்ளவர்கள் இல்லை” என்று அவர்கள் சாடியுள்ளனர். இந்த திருத்தங்கள் மேற்கொள்வதற்கு முன் கருத்துக்கேட்போதகவல்களோ தெரிவிக்கவில்லை. மற்ற கல்வியாளர்களோடு ஆலோசனை கேட்கப்பட்டு இருந்தல் நாங்கள் இந்த முடிவை ஏற்றுக் கொண்டு இருக்க மாட்டோம் என்று, என்.சி.இ.ஆர்.டி. இயக்குனர் தினேஷ் சக்லானிற்கு கொடுத்த கடிதத்தில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்வியாளரும் ஆராய்ச்சியாளருமான பால்ஷிகர் மற்றும் அரசியல் செயற்பாட்டாளரும் ஸ்வராஜ் இந்தியாவின் தலைவருமான யோகேந்திர யாதவ் ஆகிய இருவரும் 2005 தேசிய கல்வித் திட்டங்கள் அமைப்பின் அடிப்படையில் 9 முதல் 12 வகுப்பு வரையிலான அரசியல் அறிவியல் பாடத்திட்டத்தின் முதன்மை ஆலோசகர்களாக இருந்தனர்.

கற்பிக்க முற்றிலும் பயனற்றது!

“ஒவ்வொரு உரைக்கு பின்னும் ஒரு தர்க்கம் உள்ளது, பாடப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த நீக்கங்கள் அதிகாரத்தில் உள்ளவர் களை மகிழ்விப்பதைத் தவிர வேறு எந்த தர்க்கத்தையும் கொண்டிருக்க வில்லை. பாடப்புத்தகங்கள் மோசமான முறையில் சிதைக்கப்பட்டுவிட்டன. இது சமூக வியல் துறைகளில் படிக்கும் மாணவர்களின் விமர்சனம் மற்றும் கேள்வி கேட்கும் திறனை மட்டுப்படுத்தும். இந்த புத்தகங்கள் அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு அரசியல் கோட்பாடுகள் மற்றும் வரலாற்று ரீதியாக நடைபெற்ற அரசியல் மாற்றங்கள் குறித்து கற்பிக்க முற்றிலும் பயனற்றது” என்று அந்த கடிதத்தில் அவர்கள் கூறியுள்ளனர்.

பா.ஜ.க.வின் பொய் நிரூபணம்!

கடந்த மாதம் என்.சி.இ.ஆர்.டி. புத்தகங்களில் இருந்து இந்து முஸ்லீம் ஒற்றுமை குறித்து காந்தியின் பார்வை, அதைத் தொடர்ந்து இந்து தீவிரவாதிகளால் காந்தி படுகொலை செய்யப்பட்டது, ஆர்.எஸ்.எஸ். மீதான தடை, இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத், விவசாயிகளின் போராட்டம் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை என்.சி.இ.ஆர்.டி. நீக்கியது. மேலும், பா.ஜ.க. ஆட்சியில் குஜராத்தில் நடைபெற்ற வன்முறை குறித்தான பகுதிகளும் நீக்கப்பட்டு, ஆர்.எஸ்.எஸ்.க்கு சாதகமான பாடத்திட்டமாக மாற்றப்பட்டுள்ள செயலுக்கு நாடு முழுவதும் பெரும் கண்டனங்கள் எழுந்த போது, “பகுத்தறிவு நடவடிக்கையின் ஒரு பகுதியாக நிபுணர்களின் ஆலோசனையோடுதான் இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன” என்று ஒன்றிய அரசு கூறியது. தற்போது இந்த கடிதத்தின் வாயிலாக அது பொய் என நிரூபணம் ஆகியுள்ளது.

மேலும் அந்தக் கடிதத்தில், “பாடப்புத்தகங்கள் தயாரிப்பதில் தொடர்புடைய கல்வியாளர்கள் என்ற முறையில் உண்மைகள் சிதைக்கப்பட்ட இந்த பாடப்புத்தகங்களில் எங்கள் பெயர் இடம்பெறுவதை நாங்கள் விரும்பவில்லை. பகுத்தறிவு முறையில் என்று சொல்லிக் கொள்ள கூடிய இந்த பகுத்தறிவற்ற செயலில் எங்களது கருத்து வேறுபாட்டை நாங்கள் வெளிப்படையாக தெரிவித்துக் கொள்கிறோம்” என்றும் இந்த பாடப்புத்தகங்களில் இருந்து தங்களின் பெயரை நீக்கவும் வலியுறுத்தியுள்ளனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் அடரி ஊராட்சியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் சி.வெ.கணேசன் சிறப்புரை ஆற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர்கள் குடியாத்தம் குமரன், சேலம் சுஜாதா மற்றும் பலர் உள்ளனர்.